# ஜெபசத்தம்

ராஜஸ்தான் மகிமையின் ஜெப ஊழியம்

RAJASTHAN GLORIOUS PRAYER MISSION

MISSIONARY ORGANIZATION



Missionary
*D. Suresh Kumar*
(Director of RGPM)

## Happy New Year

**யாக்கோபு வேர் பற்றி
இஸ்ரவேல் பூத்துக் காய்த்து
உலகத்தை பலனால் நிரப்பும்
நாட்கள் வரும்.**

January 2024

மிஷனரியாக போ! மிஷனரிகளுக்காக ஜெபி! மிஷனரிகளை அனுப்பு!

# RGPM மிஷனரி பணித்தளங்கள்










## அன்பின் மடல்.......

**D. சுரேஷ்குமார்**

**அன்பான ஜெபப் பங்காளர்களுக்கு**

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எமது இனிய புது வருட நல்வாழ்த்துக்கள்.**

இந்த வருடம் தேவன் உண்மையான கிறஸ்தவ ஜனத்தைக் கொண்டு தம்முடைய இந்த உலகத்தின் பலனால் நிரப்ப போகிறார். எப்படி ஓர் மரம் பூ பூத்து, காய் காய்த்து கனியை கொடுக்கிறதோ அப்படியே தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனத்தைக் கொண்டு இந்த உலகத்தையே பலனால் நிரப்ப போகிறார். கடந்த 20 வருடமாக மிஷனரி பணித்தளத்தில் மிஷன் வீடு இல்லாமல் வாடகை வீட்டில் தங்கியிருந்தோம். தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படி RGPM committee -ல் உள்ள 3 பேரிடம் பேசி அவர்கள் கொடுத்த நன்கொடை மூலமாக தற்போது மிஷன் வீடு கட்டப்பட்டுள்ளது. பிரதிஷ்டை ஆராதனை ஆசீர்வாதமாக நடைபெற்றது. தென் இந்தியா மற்றும் Abudhabi -லிருந்து வந்த சகோதர சகோதரிகளுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதிய வருடத்தில் பல புதிய மாவட்டங்களில் ஊழியங்கள் தொடங்க உள்ளோம். பலவித தீர்மானங்களோடு 2024 -ம் வருடத்தை ஆரம்பித்துள்ளோம். கர்த்தர் தாமே தம்முடைய புயத்தினால் நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

2024ம் வருடம் கிறிஸ்துவுக்குட்பட்டவர்கள் தேசமெங்கும் வேர்பற்றி பிடிப்பட்டார்கள். வருகிற எழும்புதலுக்கும் இந்த வருடம் அஸ்திபாரமாக அமையும். எலியாவின் நாட்களில் இருமனமாக குந்தி நடந்தவர்கள் தேவன் எலியா மூலமாக செய்த அற்புதத்தின் மூலமாக கர்த்தரை தெய்வம் என அறிக்கையிட்டது போல வரும் நாட்களில் கிறிஸ்துவே மெய்யான தெய்வம் என அறிக்கையிட்டு அநேகர் விசுவாச வாழ்வில் வேரூன்ற படுவார்கள். எத்தனை புயல் காற்று போல சோதனை வந்தாலும் கிறிஸ்துவுக்குள் வளர்க்கிற தேவ ஜனம் வேரூன்றி பூத்து காய் காய்த்து கனி கொடுக்கும்.

செய்தி




# யாக்கோபு வேர் பற்றி இஸ்ரவேல் பூத்துக் காய்த்து உலகத்தை பலனால் நிரப்பும் நாட்கள் வரும்.

மிஷனரி
D. சுரேஷ் குமார்

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்கள் அனைவருக்கும் எமது இனிய புது வருட நல் வாழ்த்துக்கள்.**

**யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்.**

## யாக்கோபே வேரூன்றுவாய்:

தேவனாகிய கர்த்தர் வாக்குத்தத்தத்தை சில உவமைகளுக்கு ஒப்பிட்டு பேசுவதை நாம் காண முடியும். பயங்கரமான காற்று மழை வரும் போது மரங்கள் கீழே சாய்ந்து கிடப்பதை காணமுடியும். சில மரங்கள் கொப்புகள் முறிக்கப்பட்டு விழுந்து கிடக்கும். உரிமையாளர்கள் முறிந்த கொப்புகளை அகற்றி விடுவார்கள். பின்பு அந்த மரம் வளரும். ஆனால் வேரோடு சாய்ந்த மரத்தை வெட்டி விறகுக்கு விற்று விடுவார்கள். எனவே ஒரு மரம் வேர் பற்ற வேண்டியது அவசியமாயிருக்கிறது. சில சந்ததிகளை பார்க்கும் போது பணம் படைத்தவர்கள். அறிவில் தேறினவர்கள். உயர் பதவியை வகிப்பவர்கள். தேசத்தின் ஜனங்கள் சொல்லுவார்கள் இவர்களுக்கென்ன? பல தலைமுறை உட்கார்ந்து சாப்பிடுவார்கள். இவர்கள் சந்ததி பேர் பெற்று விளங்கும். ஆனால் பல வருடங்களுக்கு பிறகு அந்த சந்ததியை தேடி பார்த்தால் அவர்களை காண்பதில்லை. துன்மார்க்கன் நீதிமான் சபையில் நிலை நிற்பதில்லை. காரணம் என்ன? சூறாவளி காற்று போல பல பிரச்சினைகள், இழப்புகள், நஷ்டங்கள் தன் வாழ்வில் வரும் போது சரியாக வேர் பற்றி பிடிக்காத படியினால், தற்கொலை செய்து அல்லது பெரும் நஷ்டமடைந்து தான் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போய் விடுகிறார்கள். ஒரு மரம் கனி கொடுக்க வேண்டுமென்றால் பல சூறாவளி காற்றிலிருந்து தப்பிக்க வேண்டுமென்றால் நல்ல வேர் பற்றி பிடிக்க வேண்டும். ஆனால் ஒரு சிலர் தப்பி பிழைப்பார்களோ என நினைப்போம். ஆனால் அவனுடைய சந்ததி பேர் பெற்று விளங்கும். ஏசாயா 27:6-ல் இரண்டு காரியங்களை நாம் காண முடியும். ஒன்று யாக்கோபு வேர் பற்றி இஸ்ரவேல் பூ பூத்து, காய் காய்த்து இந்த உலகத்தை பலனால் நிரப்பும் நாட்கள் வரும்.

யாக்கோபு என்ற பெயரின் அர்த்தம் எத்தன். ஏமாற்றி பிழைக்கிறான். நகம் நனையாமல் நத்தை எடுக்கிறவனைப் போல உள்ளவன். ஆனால் கர்த்தர் சொன்னார் இந்த யாக்கோபு வேர் பற்றி பிடிப்பான். யாக்கோபின் சரித்திரத்தை நாம் தியானிக்கும் போது, தன் தகப்பன் மற்றும் சகோதரனை ஏமாற்றி ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டான். தன் சகோதரன் கோபத்திற்கு ஆளான படியால் அந்த இடத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை. எந்த தாய் ஆசீர்வாதத்தை கள்ளத்தனமாக வாங்கி கொடுத்தாளோ அவளே யாக்கோபை துரத்தி விடுகிற சூழ்நிலைக்குள்ளாக்கப்பட்டாள். மனிதனால் தவறான பாதையில் கிடைக்கும் ஆசீர்வாதம் நம்மை வேர்பற்ற விடுவதில்லை. எத்தனாக காணப்பட்டு பெற்ற ஆசீர்வாதத்தை இழந்தான். கர்த்தர் யாக்கோபுக்கு இரங்கி யாக்கோபு வேர் பற்ற வேண்டுமென்பதற்காக யாக்கோபுக்கு வழி காட்ட ஆரம்பித்தார். எப்போது எத்தன் என்ற தன்மையை விட்டு மனந்திரும்பி கர்த்தருக்காக வைராக்கியமாக செயல்பட ஆரம்பித்தாரோ அப்போதே யாக்கோபின் வேர் பற்றி பிடித்தது.

## தரிசனம் தேவை:

தரிசனம் இல்லாத இடங்களில் ஜனங்கள் சீர்கெட்டு போவார்கள். ஓர் சந்ததி வேர் பற்றாமல் அழிந்து போகுமானால் இவர்களுக்குள் விசுவாசம் இல்லை. தனிப்பட்ட ஜீவியம் சரியாக இல்லை. நகோமியின் இரண்டு மருமகள்களில் ஒர்பாள் வேர்பற்ற வில்லை. ஆனால் ரூத் வேர்பற்றி பூ பூத்து காய் காய்த்து தாவீதின் சந்ததியை உருவாக்கி விட்டாள். ஆனால் ரூத்தின் சரித்திரம் வெளி பார்வைக்கு பட்டுப் போன மரம். இந்த மரம் வேர் பற்றி பிடிக்குமா? இது ஒரு பெரிய கேள்வி குறி. ஆனால் ரூத்திடம் காணப்பட்ட தனிப்பட்ட ஜீவியம் அவருடைய செயலில் அறிந்து கொள்ளலாம். ரூத் 1:16, அதற்கு ரூத்: **நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்** என்றான். தேவன் பட்டுப் போன மரத்தை வேர் பற்றிக் கொள்ள வழி வாசலைத் திறந்தார். நகோமி ரூத்திடம் உன் பெயர் நிலைத்திருக்க இனி பிள்ளைப் பெற்றுக் கொடுக்க என்னால் முடியாது. உன் தேவர்களிடத்தில் திரும்பி போ என்றாள். ஆனால் ரூத்தோ இஸ்ரவேலின் தேவன் என்னை வேரூன்ற செய்வார் என்ற நம்பிக்கையில் பெத்தேலுக்கு வந்தாள். கர்த்தர் அவளை ஆசீர்வதித்து பெரும் சந்ததி உருவாக மூலைக்கல்லாக பயன்படுத்தினார். இதை வாசிக்கிற தேவ ஜனமே ரூத்தைப் போல சந்ததியில்லாமல் நான் எப்படி வேரூன்றுவேன் என நினைத்து கலங்குகிறாயோ தேவன் உன்னை இந்த பூமியிலே வேரூன்ற செய்வார்.

## யாக்கோபு வேர்பற்ற காரணம் என்ன?

ஆதியாகமத்தில் மொத்தம் 50 அதிகாரங்கள் உள்ளன. இதில் 25 அதிகாரம் யாக்கோபை பற்றி தெளிவாக எழுதப்பட்டுள்ளன. ஆதியாகமம் 25:32 தன் பிறப்பால் கிடைக்காத சேஷ்ட புத்திர பாகத்தை பெற்றுக் கொள்ள மிகுந்த கவனமாக காணப்பட்டான் ஆனால் பிறப்பால் பெற்ற சேஷ்ட புத்திரபாகத்தை ஏசா அலட்சியம் பண்ணினான். இதில்

நாம் கவனிக்க வேண்டிய செய்தி ஏசாவிடம் காணப்பட்டது மாம்சீக பசி, யாக்கோபில் காணப்பட்டது ஆன்மீக பசி. ஓர் மனிதனுடைய வாழ்க்கையில் காணப்படும் மாம்சீக பசி என்பது பொருளாசை,விபச்சாரம், வேசித்தனம், தற்பெருமை, கௌரவம், மான மரியாதையை தேடி ஓடுதல், மற்றவர்கள் தன்னை கனம் பண்ண வேண்டுமென விரும்புதல் இவைகளையே நாடி ஓடுகிறவர்கள் தன் வழியில் வேர் பற்றுவதில்லை. வேதம் சொல்லுகிறது பிற்பாடு கண்ணீர் விட்டு தேடியும் மனம் மாறுதலை காணாமல் போனான். எபிரெயர்.12:16,17 **ஒருவனும் வேசிக் கள்ளனாகவும், ஒரு வேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப் போட்ட ஏசாவைப் போலச் சீர் கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணிர் விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்.** ஆனால் யாக்கோபை பாருங்கள் இவ்வுலக ஆசைகள் மேல் கவனம் வைக்காமல், ஆபிரகாம், ஈசாக்கு என்ற தலைமுறையில் அடுத்து யாக்கோபு பெயர் வர வேண்டும். ஆபிரகாமையும், ஈசாக்கையும் ஆசீர்வதித்த தேவன் தன்னை ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆவலுடன் எதிர்பார்த்து சேஷ்ட புத்திரபாகத்தை தன் சிவப்பு கூழைக் கொடுத்துப் பெற்றுக் கொண்டான். யாக்கோபு வேரூன்ற காரணம் ஆன்மீக பசி அவனிடம் காணப்பட்டது. எனவே வேதம் சொல்லுகிறது யாக்கோபே நீ வேரூன்றுவாய். எந்த ஒரு ஆவிக்குரிய மனிதன் தன் வாழ்வில் உலகம், மாம்சீகம், பிசாசுக்கு இடம் கொடாமல், தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளுக்கு முதலிடம் கொடுத்து ஆன்மீகத்தை நோக்கி ஓடுகிறானோ அவன் தன் வாழ்வில் இலையுதிராத மரத்தைப் போல நீரூற்றண்டைகளில் வேரூன்றப்பட்ட மரத்தைப் போல தன் வாழ்வில் வேரூன்றுவான். சவுலைப் பாருங்கள் தேவ சத்தத்திற்கு செவி கொடாமல், கொள்ளையின் மேல் தன் கண்களை பறக்க விட்டு தன் இருதயம் பொருளாசையின் மேல் இருந்த படியினால் தன் ராஜ்ய பாரத்தை இழந்தான். மனிதனிடத்திலிருந்து வரும் மேன்மையை நாடினான். அவன் மாத்ரமல்ல அவன் சந்ததி வேரருப்புண்டு போயிற்று. ஆனால் தாவீது கர்த்தரையே தாபரமாக கொண்ட படியினால் தாவீது மாத்திரமல்ல அவன் சந்ததி வேரூன்றப்பட்டது. இதை வாசிக்கிற தேவ ஜனமே ஆவிக்குரிய பசியுடையவர்களாக நாம் காணப்பட வேண்டும். வேதம் வாசிப்பது அதை தியானிப்பது அதன் படி நடக்க நம்மை அர்ப்பணம் செய்வது போன்ற விஷயத்தில் மிகுந்த கவனத்தை நாம் கொடுக்கும் போது கர்த்தர் நம்மை வேரூன்ற செய்வார்.

### கீழ்படிதல்:

யாக்கோபின் சுபாவம் கீழ்படிதலுள்ளவனாக காணப்பட்டான். ஆதி 28:6,7 , **ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து, ஒரு பெண்ணைக் கொள்ளும் படி அவனைப் பதான் அராமுக்கு அனுப்பினதையும், அவனை ஆசீர்வதிக்கையில்: நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண் கொள்ள வேண்டாம் என்று அவனுக்குக் கட்டளையிட்டதையும், யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் கீழ்படிந்து, பதான் அராமுக்குப் புறப்பட்டுப் போனதையும் ஏசா கண்டதினால்** தன் தகப்பனுக்கும்,

தாய்க்கும் கீழ்படிந்து போனான். எந்த ஒரு மனிதனுக்குள் கீழ்படிகிற குணம் காணப்படுகிறதோ அவன் வேரூன்றுவான். நம்மில் மேலான அதிகாரங்களுக்கு நாம் கீழ்படிய வேண்டும். அதிகாரங்கள் தேவனால் ஒரு மனிதனுக்கு அருளப்படுகிறது. யாக்கோபு தன் வாழ்வில் கீழ்படிதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட ஆரம்பித்தான். கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி , ஆதியாகமம் 28: 13,14,15, **அதற்கு மேலாக கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும்,வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.** இந்த ஆசீர்வாதத்திற்கு அவனை அனுப்பினார். 20 வருடங்களாக கர்த்தர் யாக்கோபை விருத்தியடைய செய்தார். ஆதியாகமம் 30: 43, **இவ்விதமாய் அந்தப் புருஷன் மிகவும் விருத்தியடைந்து, திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனானான்**. ஒரு கோலோடு சென்ற இவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாக மாற்றப்பட்டான். வருகிற 2024-ம் ஆண்டு தேவ பிள்ளைகள் வேரூன்றி, பூபூத்து, காய்காய்த்து, கனி கொடுப்பார்கள். RGPM மிஷனரி ஸ்தாபனத்திற்கு தேவன் கொடுத்த வார்த்தை நீ வேரூன்றுவாய். பூ பூத்து, காய்காய்த்து, கனி கொடுத்து இதனால் வரும் பலன் உலகத்தை நிரப்பும். மிஷனரி பணியில் ஈடுபட்டுள்ள உதவி செய்கிற உங்கள் அனைவருக்கும் தேவன் கொடுக்கின்ற ஆசீர்வாதம் நீ வேரூன்றுவாய். பூபூத்து, காய் காய்த்து, கனி கொடுப்பாய்.

## பொருத்தனை:

ஆதியாகமம் 28:20,21,22 **அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து , என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்; நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்றுச் சொல்லிப் பொருத்தனை பண்ணிக் கொண்டான்.** தேவன் ஒருவனை வேரூன்ற செய்தால் தேவரீர் தனக்கு தரும் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுப்பான். கர்த்தரால் ஆசீர்வதிக்கப் படுவான். பொருளாதாரத்தில் வேரூன்ற படுவான். யாக்கோபு அதன் பின் பலவீனப்பட்டு போனதில்லை. அவன் தலைமுறை கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதத்தில் வேரூன்றப் பட்டதானால் தன் சகோதரருக்கும் கொடுத்து சமாதானமான வாழ்வை கண்டான் என வேதம் நமக்கு தெளிவாக காண்பிக்கிறது. நாம் தேவன் தரும் ஆசீர்வாதத்தில் தசமபாகம் கொடுப்போம். கர்த்தருக்கு பிரியமாக வாழ்வோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!



# தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் எப்படி ஏமாற்றப்படுவார்கள்

மத்தேயு 24:24 வசனமாகிய **ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துக் கொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.** இந்த வசனத்தை அடிப்படையாக கொண்டு இயேசு சொன்ன நேரடி வார்த்தைகளை நாம் கவனமாக தியானிப்போம்.

## A. யார் எளிதாக வஞ்சிக்கப்படுவார்கள்:

ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் வேத வசனத்தின் படி நான் எழுதுவதை ஏற்றுக் கொண்டால் நிச்சயமாக தேவனுடைய கிருபையினால் மறுபடியும் நிறைக்கப்பட்டு கர்த்தருடைய ராஜ்யத்திற்கு மிகவும் பலமாகப் பயன்படுத்தப் படுவார்கள்.

### 1. தீர்க்கதரிசனத்தை தேடி, நாடி ஊழியர்களை நாடுபவர்கள்:

நாங்கள் எப்பொழுதும் கர்த்தரோடு பேசிக் கொண்டிருப்பதாக ஜனங்களுக்கு காண்பிக்கும் பிரபல ஊழியர்கள் அநேகம். இவர்கள் சொல்லுவதையே நம்பி அநேகர் அவர்களுடைய வாய்மொழிக்காக அநேக நாட்கள் காத்திருப்பார்கள். உதாரணமாக, நான் ஒரு சகோதரிக்காக ஜெபிப்பதும் அவர்கள் என்னிடத்தில் பல காரியங்களை பேசுவதுமுண்டு. ஒரு நாள் என்னை அழைத்து கர்த்தர் என்ன சொல்லுகிறார் என்று கேட்டார்கள். அதற்கு நான் கூறிய பதில் அவர்களை என்னிடத்தில் மறுபடியும் வரவிடாமல் ஆக்கியது. என்னவென்றால் நீங்களே, ஜெபியுங்கள் வேதத்தை தியானியுங்கள் என்பது தான். பாருங்கள்! இவர்கள் எதை நம்பி என்னிடத்தில் வந்தார்கள். இப்படிப்பட்டவர்கள் எளிதாக ஏமாந்துப் போவார்கள். அவர்கள் மிகவும் வசதிப் படைத்தவர்கள். நான் அவர்களை தவறாக நடத்தியிருந்தால் அதிகமாக பணம் கொடுப்பார்கள். ஆனால் அவர்களுக்கோ கர்த்தரிடத்தில் உறவை உருவாக்கி கொள்ள முடியாது.

### 2. வாக்குத்தத்தம் தேடி ஊழியர்களை நாடுபவர்கள்:

மாத தொடக்கமானால் ஊழியர் மூலமாக நமக்கு வாக்குத்தத்தம் கிடைக்கும் என்று நம்பியே வேதம் வாசிக்காமல் வாழ்கின்றவர்கள் ஏராளம் உண்டு. இவர்கள் வாக்குத்தத்தத்தை பெற்றுக் கொண்டு தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய பாதைகளை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியாத படி, ஜோசியக்காரன் சொல்வது போல நம்பி, நம்பி தங்களை தேற்றிக் கொண்டு வாழ்பவர்களாக முடிவிலே வேத வளர்ச்சியில்லாமல் ஊழியர்களையே தரிசிப்பவர்களாக மாறி விடுகின்றனர்.

### 3. அற்புதங்கள் நடப்பதை சார்ந்து ஊழியர்களையே நாடுபவர்கள்:

கர்த்தருடைய ஊழியர் கூட்டங்களில் அநேக அற்புதங்கள், சுகங்கள் ஜனங்களுக்கு நடக்கும். எப்படியானால் அற்புதங்கள், சுகமளித்தல், அடையாளங்கள் கர்த்தரால் அது நடக்கும். ஜெபிக்கும் போதும் நடக்கும். ஆனால் அதையே பல ஊழியர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள பயன்படுத்துவது தவறு. ஒரு முறை ஒரு குடும்பத்திற்காக ஜெபிக்க நான் அழைக்கப்பட்டேன். ஜெபித்து விட்டு நான் வந்து விட்டேன். அந்த குடும்பத்தின் சகோதரியை ஒரு வருடம் கழித்து பார்க்க நேரிட்டது. அவளை விசாரிக்கும் பொழுது, சகோதரனே! நீங்கள் சொன்ன படி எனக்கு ஆண் குழந்தை பிறந்து இப்பொழுது ஆறு மாதம் ஆகிறது என்றார்கள். சந்தோஷப்பட்டேன். ஆனால் எனக்கு அப்படி ஞாபகம் இல்லை. ஏனென்றால் கர்த்தர் பேசினார் அவரே வாய்க்க செய்தார்.

இரண்டாம் முறை அவர்கள் வீட்டிற்கு நான் செல்லும் போது மறுபடியும் வாயார அந்த சகோதரி என்னை புகழ ஆரம்பித்தார்கள். அப்பொழுது தெளிவாக, கண்டிப்போடு சொன்னேன். தயவு செய்து என்னை புகழ வேண்டாம். இது கர்த்தர் செய்தது என்றேன். அதன் பிறகு அந்த சகோதரி அதைப் புரிந்துக் கொண்டார்கள். இப்படி நடப்பதெல்லாம் தேவ அருளால், ஆனால் அதை நாம் பயன்படுத்தி சாட்சி என்ற பெயரில் மேடையில் மைக்கை கொடுத்து இந்த கூட்டத்திற்கு வந்தேன். எனக்கு சகோதரர் பிள்ளை பிறக்கும் என்றார் பிறந்தது. கடைசியில் ஒரு வார்த்தை கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இது சரியானது அல்ல. ஜனங்களை ஏமாற்றுவது, ஒரு குடும்பத்துக்கு நல்லது நடக்க வேண்டும் அது எல்லாருக்கும் ஜெயஸ்தம்பம் சொல்லி ஊழியம் என்ற பெயரில் நம்மை பிரபலப்படுத்துவதற்கு அல்ல. இதை உணராதவர்கள் எளிதாக வஞ்சிக்கப்படுவார்கள்.

### 4. பிரபல ஊழியர்களை எதற்கும் நாடுபவர்கள்:

எனக்கு தெரிந்த ஒரு ஊழியர் 40 வருடமாக ஊழியம் செய்கின்றார். அவரை அநேகருக்கு தெரியாது. ஏனென்றால் அவர் பிரபலமாக விரும்பவில்லை. ஒருமுறை அவர் ஐரோப்பா நாட்டில் ஊழியம் செய்கையில் ஒரு சபையில் பேசிக் கொண்டிருக்கும் போது அவர்கள் மொழியில் ஒரு பெண் இடையிலே எழும்பி ஏதோ சத்தமாக பேசி இருக்கிறார்கள். இவரும் ஏதோ என்று பயந்து ஊழியத்தை முடித்து விட்டு சென்று விட்டார். பின்னர் சபை போதகர் இவரை அழைத்து நீங்கள் பேசும் போது ஒரு பெண் கொடிய வியாதியிலிருந்து விடுதலைப் பெற்றாள். ஆகவே நீங்கள் வாருங்கள் அவளையும் வைத்து சாட்சி கூறி வீடியோ எடுத்து இந்தியா கொண்டு செல்லுங்கள் என்றாராம். அதற்கு இந்த ஊழியர். பதிலை பாருங்கள். நான் வீடியோ எடுத்து ஒவ்வொரு இடங்களிலும் போட்டால் நான் போகும் இடமெல்லாம் அநேக கூட்டங்கள் வரும். அதிலே 500 குருடர்கள், 1000 செவிடர்கள், 700 முடமானவர்கள் என்று வருவார்கள். அவர்களுக்கு நான் சுகம் கொடுக்க முடியாது. சுகம் கர்த்தரால் வரும். வேண்டாம் என்று சொல்லி விட்டார் அந்த நல்ல ஊழியர். ஆனால் சுகம் கிடைத்தது என்று கேள்வி பட்டவுடனே அநேகர் ஊழியக்காரரை தேடி ஒரு கூட்டம் விடாமல் சென்று கர்த்தரை முன் நிறுத்தாமல் விட்டு விடுவது மிகப்பெரிய ஏமாற்று. இன்று அநேக பிரபல ஊழியர்கள் செய்வது இது தான்.

### B. யார் எளிதாக வஞ்சிக்கப்பட மாட்டார்கள்:

சங்கீதம் 1:2 சொல்லுகிறது, **கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.** இரவும், பகலும் பிரபல ஊழியர்களை தேடி அற்புதங்களையும், தீர்க்கதரிசனங்களையும், வாக்குத்தத்தங்களையும் பெற காவல் இருப்பவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்லப்படவில்லை. நாம் மிகக் கவனமாக கர்த்தருடைய வார்த்தைகளை மாத்திரம் பற்றி வாழவே அழைக்கப்பட்டுள்ளோம். வசனத்தின் படி தங்களை காத்துக் கொள்ளுகின்றவர்கள் சரி எது தவறு எது என்பதை பகுத்து அறிகின்ற அறிவை வசனத்தின் மூலமாக பெற்றுக் கொள்வார்கள். இன்று நம்மை வஞ்சிக்கின்ற ஊழியம் You tube ஊழியம். இதில் செலவழிக்கப்படுகின்ற பணமும், நேரமும் ஒருவனுக்கு கிடைத்தால் ராஜஸ்தான் போன்ற மற்ற மாநிலங்களுக்கும், ஜனங்களுக்கும் எளிதாக வேத வார்த்தைகளை கொண்டு செல்ல முடியும். ஒரு கேள்வி? You tube –ல் பண்ணுகிற ஊழியர்களை ராஜஸ்தானுக்கு என்னோடு வர சொல்லுங்கள். கேட்டால் அது எனக்கு கொடுக்கப்பட்ட ஊழியமல்ல என்று சொல்லி எளிதாக தப்பித்துக் கொள்வார்கள். இவைகளையெல்லாம் நிதானித்து அறிகின்ற ஜனம் தான் வஞ்சிக்கப்படாத கூட்டங்களாக மெய்யான தேவனுக்குள் வளருபவர்களாக காணப்படுவார்கள். கர்த்தர் இந்த மாதிரியான கூட்ட ஜனங்களை அதிகப்படுத்துவாராக! ஆமென்!

சகோ. **சாம். S. ஜவஹர்**

# பணித்தளச் செய்திகள்

**பணித்தளம் : மாட்லா**

**ஊழியரின் பெயர் : சகோ. தரம் சந்த் பகோரா**

பாவல் வாடா கிராமத்தை சார்ந்த சகோ. லஷ்மண் அவர்கள் மனைவியை பாம்பு கடித்து விட்டது. விசுவாசத்தோடே ஜெபிக்கும் படியாக கூறினார்கள். எவ்வித பாதிப்புமின்றி தேவன் அவர்களை பாதுகாத்தார். மோல்தரா கிராமத்தை சார்ந்த சகோ. பிரவின் அடிக்கடி வியாதிப்பட்டார். அவர்கள் ஆராதனையில் கலந்துக் கொண்டு ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகம் கொடுத்தார். சகோதரி சவிதா, சகோதரி ரூப்லி மற்றும் சகோ. பசந்திலால் அவர்களது மகள் ஆகியோர் வியாதி நீங்க ஜெபித்தோம். தேவன் சுகம் கொடுத்து அவர்களை சாட்சியாக நிறுத்தினார். தேவனுடைய நாமம் மகிமைப் படுவதாக.

**பணித்தளம் : நென்பரா**

**ஊழியரின் பெயர் : சகோ. பன்சிலால் அகாரி**

சகோதரி அம்பாவி அசுத்த ஆவியின் போராட்டத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு காணப்பட்டார். அநேக மந்திரவாதிகளை நாடினார்கள். ஆனாலும் பயனற்று 3 வருடமாக வேதனைப்பட்டு வந்த அவர்களை சந்தித்து வேத வசனங்களை அவர்கள் குடும்பத்தாருக்கு அறிவித்து ஜெபித்தோம். பின்னர் ஆராதனைக்கு சகோதரியை அழைத்து வந்தார்கள். ஆராதனை வேளையில் தேவன் பரிபூரண விடுதலைக் கொடுத்தார். சகோ. காலு அவர்கள் இரவு பகலாக இடுப்பு வலியினால் வேதனைப்பட்டார்கள். சிகிட்சைகள் மேற்கொண்டும் குணமடைய வில்லை. அவர்களுக்காக ஜெபித்த போது தேவன் சுகம் கொடுத்தார். சகோதரி லிம்டி அவர்கள் தீராத வயிறு வலியிலிருந்து இயேசுவின் நாமத்தில் சுகம் பெற்றார். சகோ. சாந்திலால் மனநிலை சரியில்லை. அவர்களுக்காக உபவாசித்து ஜெபித்த போது தேவன் அற்புதம் செய்தார்.

**பணித்தளம் : ஹெறக்கா**

**ஊழியரின் பெயர் : சகோ. ரமேஷ் கலாசுவா**

சகோ. கார்த்திக் அவர்களது மகன் வியாதிப்பட்டு 4 நாட்கள் சாப்பிடாமல் இருந்தான். அவனுக்காக ஜெபித்தோம். தேவன் சுகம் கொடுத்து அக்குடும்பம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள கிருபை செய்தார். வயிறு வலியினால் வேதனைப்பட்ட சகோதரி ஜசோதா அவர்களுக்காக ஜெபித்த போது தேவன் சுகம் கொடுத்தார். அசுத்த ஆவியின் கிரியைகளினால் பாதிக்கப்பட்டிருந்த சகோதரி கிருபாவின் விடுதலைக்காக ஜெபித்தோம். தேவன் அற்புதம் செய்தார்.




**கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக**

இச்சை என்பது விருப்பம், ஆர்வம், ஆசை, தாகம், பசி போன்ற கருத்துகளை உள்ளடக்கியது. இவைகள் அனைத்தும் எல்லா மனிதருக்குள்ளும் எழும்பும் உணர்வுகள். இந்த உணர்வுகள் நேர்மையானவை. வேதம் காட்டுகிற வழியில் செயல்படுவோமானால் இச்சை பாவத்தை பிறப்பிக்காது. ஆனால் தவறான பாதையில் பிசாசின் தூண்டுதலின் படி செய்தால் அவைகள் நம்மை அழித்து விடும். பலவான்களை விழ வைப்பது முக்கியமாக காம பசி. ஓர் மனிதன் அல்லது ஓர் மனுஷி வாலிப பருவமடையும் போது இந்த பசி உண்டாகிறது. ஆனால் இந்த பருவத்தில் இவைகளை முறையாக்கும் விதத்தை ஒருவன் கற்றுக் கொண்டால் நேர்மையான வழிக்குள் நடக்கக் கூடும். எனவே தேவன் சொன்னார் வாலிப பருவத்தில் உன் சிருஷ்டிகரை நினை. தவறான சிந்தை வர சமயம் கொடுக்க கூடாது. வாலிப பருவம் அநேக காரியங்களை கற்றுக் கொடுக்கிற உழைக்கிற காலம். இந்த நாட்களில் சரிவர படிக்காமல், உழைக்காமல் தனிமையை தேடி காலத்தை வீணடித்தால் இப்பேர்பட்ட இச்சைகள் நம்மை ஆளுகை செய்து விடும். நம்மை நாமே Busy ஆக்கி விட வேண்டும். தவறான காரியங்களை சிந்திக்க இடம் கொடுக்க கூடாது. நமது சித்தத்தை வேத வசனத்தாலும், நல்லொழுக்கங்களாலும் நிரப்ப வேண்டும். நேரம் கிடைக்கும் போது வேதத்தை வாசிக்க வேண்டும். அதை தியானிக்க வேண்டும். கர்த்தரிடத்தில் அன்பு கூற வேண்டும். இரட்சிக்கப்பட வேண்டும். நம்முடைய தாகம் பசி ஆன்மீக பாதையில் போக வேண்டும். வண்ணத்து பூச்சி பருவமடைய சில படிகள், காலங்கள் உண்டு. அதன் முன் நாம்

உதவி செய்வது போல செயல்பட்டால் வண்ணத்து பூச்சியின் பருவ நிலை சீரழிந்து போகும். அதே போல தான் வாலிப பிள்ளைகள் வேரூன்ற சில காரியங்களை அறிந்துக் கொள்கின்ற காலம். தன் சிந்தை தவறான கருத்துகளால் நிரப்பப்பட கூடாது. காம உணர்வை உண்டு பண்ணும் சிந்தைகளுக்கு நாம் இடம் கொடுக்க கூடாது. இடம் கொடுத்தால் பிசாசு புகுந்து விடுவான். நம்முடைய தூய்மையான வாழ்க்கையை சீரழித்து விடுவான். ஒருவன் தன் வாழ்வு நெறிக் கெட்டு போக இடம் கொடுக்கும் முதல் இடம் சிந்தனை தான். தேவன் மனிதனுக்கு தேவையான அனைத்தும் இவ்வுலகில் படைத்து வைத்துள்ளார். ஆனால் வேதம் காட்டுகிற படி மனிதன் தன் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் நித்திய ஜீவனை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

## தவறான ஐக்கியம்:

வாலிபப்பிள்ளைகள் கெட்டு போவதற்கு முக்கிய காரணம் தவறான ஐக்கியம். நண்பன் என்ற முறையில் பழக்கம் ஏற்பட்டு விடலாம். தன் உயிர்க்கு மேலாக நேசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்கள் தாய் தகப்பனுக்கு மேலாக நண்பர்கள் சொல்வதைக் கேட்டு நடக்க ஆரம்பித்து விடுவார்கள். எனவே நாம் வைக்கும் ஐக்கியம் எப்படிப்பட்டது என்பதை வைத்து தான் குணநலன்கள் பிரதிபலிக்கும் தவறான நண்பனோடு சேர்ந்தால் உன்னில் காணப்படும் காம பசிக்கு அவன் ஆகாரம் ஊட்டுவான். ஆனால் நேர்மையான நல்ல குணம் கொண்ட மனிதனோடு ஐக்கியம் வைக்கும் போது நல் வழியை காட்டி கொடுப்பான். வாலிப ஜெப ஐக்கியத்தோடு நாம் இணைத்துக் கொள்ள வேண்டும். ஜெபம் நமக்கு ஆகாரமாக மாற்றப்படும் போது தெய்வீக குணங்கள் நமக்குள் வரும். நாம் நல்ல பிள்ளைகளாக திகழ்வோம். இச்சை என்ற ஆவி நமக்குள் செயல்பட இடம் கொடுக்க கூடாது. யாக்கோபின் ஒரே பெண் பிள்ளை தீனாள் உலகத்தை சுற்றிப் பார்க்க சென்றாள். தீட்டுப்பட்டவளாக மாற்றப்பட்டாள். அவள் வாழ்க்கை சீரழிந்து போனது.

வேதம் சொல்லுகிறது நீதி 31:30, **சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.** இச்சை வெளி தோற்றத்தை வைத்து உருவானால் உன் வாழ்க்கை சீரழிந்து போகும். திருமணத்திற்காக நீங்கள் செல்லும் போது குணசாலியான ஸ்திரீயை தேட வேண்டும். ஞானமுள்ள புத்தியுள்ள மனிதனாகிய இரட்சிக்கப்பட்டவனை தெரிந்தெடுக்க வேண்டும். பொருளாசை, மதிப்பு, மரியாதை போன்ற இச்சை நமக்குள் காணப்பட கூடாது. இவைகள் நம்முடைய வாழ்வை சீரழித்து விடும். மோசேயின் காலத்தில் ஓர் பாபிலோனிய சால்வையின் மேல் இச்சை வைத்த படியால் அவன் குடும்பம் முழுவதும் அழிக்கப்பட்டது. தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களில் இச்சை ஏற்பட்டால் பிசாசின் ஆவி இணைந்து நம்மை நரகத்திற்கு கொண்டு போய் விடும்.

தாவீது பத்சேபாளை பார்த்ததிலிருந்து அவனுக்குள் இச்சை ஏற்பட்டது. பாவம் செய்தான். இந்நாள் வரைக்கும் அவன் மேல் ஒரு கரும்புள்ளி இருக்கிறது. எனவே இவ்விதமான இச்சையிலிருந்து தப்பித்துக் கொள்ள தவறான ஐக்கியம், தவறான சிந்தனை, தனியாக சந்திக்கும் முறைகளை கைவிட வேண்டும். அப்போது தான் இவ்வாறான இச்சையிலிருந்து விடுபட்டு கர்த்தருக்குள் பரிசுத்தமாக வாழ முடியும் சிந்திப்போம்! ஜெபிப்போம்! செயல்படுவோம்!

## எமது முன்னேற்ற பணிதளங்கள்

| | | |
|---|---|---|
| நாகர்கோவில் | Bro. அருள்கிப்சன் | 9486207413 |
| சென்னை | Pr. பீட்டர் பிரகாஷ் | 9940292633 |
| கன்னியாகுமரி | Sis. பிந்து | 9345072771 |
| கன்னியாகுமரி | Sis. கலா | 9488263093 |
| கன்னியாகுமரி | Sis. ராஜாத்தி | 9626312737 |
| கன்னியாகுமரி | Sis. அகிலா | 9952130478 |
| கோயம்புத்தூர் | Sis. ஜெபா | 9629464347 |

ஊழியனே எழுந்திரு



# உலகம் எங்கே போகிறது

மிஷனரி. G. எட்வர்ட் ராஜன் (ராஜஸ்தான்)

**இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம் தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். 1 யோவான் 2:17, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் உலகத்தைப் பின்பற்ற கூடாது. கிறிஸ்துவின் மீது அன்பு கூறுகிறவர்கள் உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறக் கூடாது. நாம் இந்த உலகத்திற்கு சிலுவையில் மரித்திருக்க வேண்டும். தேவ அன்பு நமக்குள் பூரணப்பட்டிருக்க வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூர்ந்து உலகத்திலும் அன்பு கூறுவது என்பது இயலாத காரியம். இரண்டு எஜமான்களுக்கு யாராலும் ஊழியம் செய்ய முடியாது. மாமிசத்தின் இச்சைகளையும் உலக சினேகத்தையும் நம்மை விட்டு நீக்கிப் போட வேண்டும். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இருக்காது. மாமிசத்தின் இச்சை என்பது ஆடம்பரமான ஜீவியத்தைக் குறிக்கிறது. நம்முடைய கண்களால் காண்பது எல்லாமே நமக்கு வேண்டும் என்று மாமிசம் பேராசைப்படும். இது மாம்சத்தின் இச்சை. கண்களின் வழியாக மாம்சம் இச்சிக்கிறது. இவை நம்மை ஆள கூடாது. இவைகள் எல்லாம் நித்யமானவைகள் அல்ல. உலகமும் அதின் இச்சைகளும் ஒழிந்து போகும். தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். இவர்கள் நித்திய ஜீவனுக்கு சுதந்தரவாளிகள். இது மாத்திரமல்ல தேவனுடைய இராஜ்யத்தில்

பிரவேசிப்பார்கள். மத்தேயு7:21 அவர்கள் பாவத்திலிருந்து காக்கப்படுவார்கள். ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும். இவர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள்.

உலகப்பிரகாரமான மனிதன் மாம்சம் தரும் சிற்றின்பங்களுக்காக வாழ்கிறான். ஆனால் அர்ப்பணித்து வாழும் விசுவாசி ஆவியானவரின் சந்தோஷத்திற்காக வாழ்கிறான். ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்த வரையில் ஒரு காரியம் சரியா? தவறா? நல்லதா? கெட்டதா? என்பதல்ல கேள்வி. அது தேவனுடைய சித்தமா அல்லது இல்லையா என்பது தான் முக்கியம். எபேசியர் 5:17, அவர் தமது வழிகளை மோசேக்கும், தம்முடைய கிரியைகளை இஸ்ரவேலருக்கும் தெரியப்படுத்தினார். தேவ சித்தத்தை அறிந்த பிறகு அதை நாம் மனப்பூர்வமாய் நிறைவேற்ற வேண்டும். எபேசியர் 6:6, தேவ சித்தத்தை பேசுவது மட்டுமல்ல அதன் படி செயல்படுத்துவதன் மூலம் தேவனைப் பிரியப்படுத்த முடியும். நாம் தேவனுக்கு சித்தமானவைகள் எல்லாவற்றிலும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலை நிற்க வேண்டும் என்பதே தேவனுடைய இலக்கு. ரோமர் 12:1,2 அந்தப்படி நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுங்கள். இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரண சித்தம் இன்னதென்று பகுத்தறியுங்கள்.

தேவன் தமது வசனத்தின் மூலம் சித்தத்தை வெளிப்படுத்துகிறார். சங்கீதம்.119:105 **உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.** ஜெபத்தின் மூலமாகவும் பரிசுத்த ஆவியின் மூலமாகவும் தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துவார். உள்ளத்தின் வழியாக உலகம் கிறிஸ்தவனுக்குள் புகுகிறது. உலகத்தில் அன்பு கூறாதீர்கள். பிதாவின் அன்பை விட்டு பிரிக்கும் அல்லது அவரது சித்தத்தை செய்யாத படி பிரிக்கும் எந்த காரியத்திற்கும் இடம் கொடுக்க வேண்டாம். இம்மைக்காக வாழாதே, தேவ சித்தத்திற்காக வாழ்ந்து என்றென்றைக்கும் நிலைத்திரு ஆமென்!




சீர்திருத்தம் என்ற வார்த்தையைக் கேட்ட உடன் நினைவுக்கு வருபவர்கள் மாட்டின் லூத்தர் மற்றும் ஜான் விக்ளிப். ஆனால் பலருக்கு மார்ட்டின் பியூசர் நினைவுக்கு வருவதில்லை. மார்ட்டின் பியூசர் ஓர் சிறந்த சீர்திருத்தவாதி. அநேக ஆவிக்குரிய புத்தகங்களையும் விளக்க உரைகளையும் எழுதியவர். டொமினிக்கன் குழுவிலிருந்து தன்னுடைய ஆவிக்குரிய பயணத்தை ஆரம்பித்தவர். 1521 ம் ஆண்டு புராட்டஸ்டண்டு திருச்சபையைத் தழுவினார். எனவே, 1522ம் ஆண்டு ரோமன் கத்தோலிக்கச் சபையிலிருந்து நீக்கப்பட்டார்.

அக்காலத்தில் ஒரு பெரிய குழப்பமானது புரட்டஸ்டாண்டு திருச்சபையில் காணப்பட்டது. எது புராட்டஸ்டண்டு திருச்சபை? மார்ட்டின் லூத்தரைப் பின்பற்றிய சபையா? அல்லது ஸ்விங்கிளியைப் பின்பற்றிய சபையா? ஏனெனில் பல கருத்து வேறுபாடுகள் மலிந்து கிடந்தன. ஆங்காங்கே சிறுசிறு சபைகள் தோன்றலாயின. புராட்டஸ்டண்ட் திருச்சபைக்குள்ளே பிளவுகள் பிறந்தன.

மார்ட்டின் பியூசர் இந்நிலைகளைக் கண்டு மிகவும் வேதனையடைந்தார். சிதறிக் கிடந்த புராட்டஸ்டண்ட் மக்களை இணைக்க விரும்பினார். ஆண்டவரின் உதவியுடன் செயல்பட ஆரம்பித்தார். முயற்சிகள் பல நடந்தும் ஒற்றுமை ஏற்படவில்லை. மனம் நொந்து போனார். ஆனால் இவருடைய கருத்துக்களால் கால்வின் மிகவும் கவரப்பட்டார். மார்ட்டின் தான் எழுதிய **இயேசு கிறிஸ்துவின் அரசு** என்ற நூலால் புகழ் பெறத் தொடங்கினார். இங்கிலாந்து அரசு இவரை அழைத்தது. அங்கு தாமஸ் கிராண்மர் என்ற பேராயர் இவரை கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் பேராசிரியராக அமர்த்தினார். கிறிஸ்துவின் ராஜ்யத்தை அங்கே கட்ட ஆரம்பித்தார்.

1551ஆம் ஆண்டு மரணமடைந்த இவரின் எலும்புகள் மேரி டியூடர் என்ற கத்தோலிக்க அரசியால் தோண்டி எடுக்கப்பட்டு சுட்டெரிக்கப்பட்டது. கல்லறையும் நாசமாக்கப்பட்டது. திருச்சபைகளுக்குள் ஒற்றுமை என்பது தகர்ந்து போனது.

அன்பரே! திருச்சபைகளுக்குள் ஒற்றுமை ஏற்படக் கைக்கோர்த்து செயல்படுவீரா?

# Uncompromised christianity

We live in a world with an overload of information, which leads many people into disagreements and confusion. What can we do with so much information? Though it may be true, will we ever be able to solve everything? Let us look to the Word of God with the help of the Holy Spirit to find some practical guidance.

First of all, try to understand Luke 12:25-26 **"Who of you by worrying can add a single hour to your life? Since you cannot do this very little thing, why do you worry about the rest?"** Wow, what a powerful question straight from Jesus. The Christianity Jesus established is very different from the way many people think about Christianity today. You may know the Bible, the written living Word of God, to be full of promises and teachings. Jesus wants to fulfill these promises as we obey the teachings. Yet something is wrong in our worship as well as prayers. In the past century many theologians introduced new ways in Christianity which still continue to poison Believers. Let us now look at some of these deceptive teachings and ways.

Acts 20:29 says, **"I know that after I leave, savage wolves will come in among you and will not spare the flock. Even from your own number men will arise and distort the truth in order to draw away disciples after them."** Keep this in mind - their goal is to destroy the flock because of their own greed for money. In order to keep the flock they must devise new ideology twisted teachings which appear aligned with the Word of God. They cunningly introduced from within the Church that every Believer must receive the spirit of tongues. They focused more on the gifts or the Spirit rather than obedience to the Giver of all gifts. Many in our churches still continue to fall prey to this trap. But the Bible clearly says in 1 John 2:20, **"But you have an anointing from the Holy One, and all of you know the truth."**

Dear children of God, we must understand that we already received from our Lord His anointing by grace through the Holy Spirit the moment we became Believers. We have no need for Pastors and Ministers to pray specially for this anointing. 1 Corinthians 12:28-30 refers to the gifts the Lord gives all His children for the purpose of effectively serving Him within the

Body of Christ, **"And God has placed in the church first of all apostles, second prophets, third teachers, then miracles, then gifts of healing, of helping, of guidance, and of different kinds of tongues. Are all apostles? Are all prophets? Are all teachers? Do all work miracles? Do all have gifts of healing? Do all speak in tongues? Do all interpret?"** Many churches and Pastors focus on speaking in tongues as a gift to be desired because it appeals to the people in order to keep members in their congregation. Also, there is no way to validate whether it is true or false so it can be easily used by preachers to deceive the people. The true gift of tongues is used as in the early Church by the Lord for His purposes. It is not to be falsely misrepresented or misused to move members to blindly give or captivate members to stay in their churches/fellowships.

Let us now come to understand true uncompromised Christianity. It is anyone who follows the exact Word of God and anyone who will not compromise his faith for anything. Also, one who follows uncompromised Christianity will never elevate man by putting their trust in Pastors or Servants of God. Their full trust and obedience is always and only in Jesus Christ as Lord. We must be always searching and studying Scripture that we may better follow the Lord in true obedience. Pastors and ministers must also be diligent in leading the flock in uncompromised messages of truth and willing to let them go wherever they can grow in the grace and knowledge of God in Christ. They must never quarrel against one another or seek to please people in order to keep them in their church because these involve selfish ambition. We must also not have too much friendship with the world, which means having fellowship with those who are seeking after power, position and any type of material wealth. These people are unable to understand the difference between the world and Christianity. They always seem to be successful in life, but they cannot make a difference for the Kingdom of God because they live no differently than those of the world. We must understand the kind of culture we live in India, which is basically a human worshipping culture. We must remove ourselves from any kind of Socialism and show the true compassion of our Lord by sharing the truth with others and living by it. By this we may live a life which is contrary to this world and its design and pleasing to our Lord and Master. Amen!

**Bro. Sam S. Jawahar**

# RGPM மிஷனரி பணித்தளங்கள்

















Editor & Publisher : Missionary D. Suresh Kumar on behalf of
Rajasthan Glorious Prayer Mission, 32/23, Cave Street, Nagercoil - 629 001.
RGPM Trust. Registered No. : TN-204-2004, TN 74-06/2010

ராஜஸ்தானில் RGPM மிஷனரி ஸ்தாபனத்தின்

# மிஷனரி கூடுகை

**இடம் :** சதிராம்பூர், டுங்கர்ப்பூர் மாவட்டம்.

**நாள் :** 2024 பிப்ரவரி 12,13,14,15 (திங்கள் முதல் வியாழன் வரை)



தலைமை :

## மிஷனரி. D. சுரேஷ்குமார்

*(Founder, RGPM, Rajasthan)*

தேவசெய்தி :

## பாஸ்டர். S. ஜாண் ஜெயகுமார்

*(El-Shaddai Mission, Nagercoil)*



ஜெபியுங்கள்!

பங்கு பெறுங்கள்!

**Registered Office :**
R.G.P.M., 32/23, Cave Street, Near TWAD Office,
Nagercoil, K.K.District. - 629 001. Tamil Nadu, India.
☎ : 04652 - 420413, 📱 : 094862 07413
✉ : headofficergpm@gmail.com

Phonepe & Gpay :
D. Suresh Kumar
9486866413

**Field office :**
R.G.P.M., Sathirampur,
Dungarpur District,
Rajasthan - 314 001.
Phone : 09443152148

YouTube : rajasthanglouriesprayermission 🌐 www.rajesthangloriousprayermission.org

Go As Missionary! Pray For Missionaries! Send Missionaries!

Private Circulation Only

Benzen Printers, Nagercoil. Cell : 94424 70190